www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 10

தேர்வு எண் | | | | | | |

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2024

நேரம் : 1.30 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி – 1 (மதிப்பெண்கள் – 7)

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7X1=7

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ---------
(அ) குலைவகை (ஆ) மணிவகை (இ) கொழுந்துவகை (ஈ) இலைவகை
2. "மெத்தவணிகலன்" என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது ---------
(அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும் (ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
(இ) ஐம்பெரும்காப்பியங்களும் அணிகலன்களும் (ஈ) வணிக கப்பல்களும் அணிகலன்களும்
3. "விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான்" – என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை ---
(அ) நிலத்திற்கேற்ற விருந்து (ஆ) இன்மையிலும் விருந்து
(இ) அல்லிலும் விருந்து (ஈ) உற்றாரின் விருந்து
4. 'கேட்டாவர் மகிழப் பாடிய பாடல் இது' – இத்தொடர் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே ---------
(அ) பாடிய : கேட்டவர் (ஆ) பாடல் : பாடிய (இ) கேட்டவர் : பாடிய (ஈ) பாடல் : கேட்டவர்
5. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது --------
(அ) வேற்றுமை உருபு (ஆ) எழுவாய் (இ) உவம உருபு (ஈ) உரிச்சொல்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

*செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு*
*தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்று*
*உள்முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு*
*மீண்டும் பீடு உயர்பு ஈண்டி அவற்றிற்கும்*
*உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்*

6. இலக்கணக் குறிப்புத் தருக – செந்தீ
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை
7. பொருள் தருக – பீடு
அ) பாம்பு ஆ) கொம்பு இ) சிறப்பு ஈ) நூல்

பகுதி – II (மதிப்பெண்கள் – 8)

பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 2x2=4

8. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ) ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.
ஆ) தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.
9. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
10. 'அருமை' எனத் தொடங்கும் திருக்குறளைப் பிழையின்றி எழுதுக.

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** 2x2=4

11. கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளை நிறைவு செய்க.
அ) உப்பிட்டவரை --------- ஆ) விருந்தும் ---------
12. அகராதியைக் கண்டு பொருள் எழுதுக. அ) கங்குல் ஆ) பழனம்
13. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்துக.

பகுதி – III (மதிப்பெண்கள் – 9)

பிரிவு – 1

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1X3=3

14. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது – இதுப்போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.



Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

15. கீழ்க்காணும் உரையினைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும் போது, தமிழிலுள்ள ஒருபொருட்பலச்சொல் வரிசைகள் அவற்றில் இல்லாக் குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத்தெளிவாகத் தோன்றும். தமிழில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுத், தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்கு உரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள என்று திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். கால்டுவெல் அவர்கள்.

அ) தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளில் எவ்வரிசை சொற்கள் இல்லை?

ஆ) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?

இ) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## பிரிவு – 2

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1X3=3

16. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

17. "அன்னை மொழியே" எனத் தொடங்கி, பேரரசே! என முடியும், அன்னை மொழியே! பாடலினைப் பிழையின்றி எழுதுக.

## பிரிவு – 3

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1X3=3

18. வினைமுற்றுறை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.

அ) கலையரங்கத்தில் எனக்காகக் காத்து இருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.

ஆ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

இ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

19. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு – இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.


## பகுதி – IV (மதிப்பெண்கள் – 10)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 2X5=10

20. அ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. (அல்லது)

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

21. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



(அல்லது)

ஆ) மொழி பெயர்க்க.

The golden sun gets up early in the morning and stars it bright rays to fade away the dark. The milky clouds start their bantering wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

## பகுதி – V (மதிப்பெண்கள் – 16)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 2X8=16

22. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரை குறிப்புகளை எழுதுக. (அல்லது)

ஆ) தமிழரின் விருந்தோம்பல் பண்பினை இலக்கியங்கள் வாயிலாக விளக்குக.

23. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதையின் வாயிலாக விளக்குக. (அல்லது)

ஆ) குமரிக்கடல் முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ்த்தேடிந்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழிர்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்குப் பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவை அணிவித்து சிற்றிலக்கியங்களையெல்லாம் அணியாகப் பூட்டி, அழகு கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப்புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக் கொண்டு சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com